மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நெடுவாக்கோட்டை, மேலவாசல், காஞ்சி குடிக்காடு, அத்திக்கோட்டை, அன்னாபுரம், பேரையூர்,வாண்டையான்குடிக்காடு,மேலநெம்மேலி,மகாதேவப்பட்டினம், முக்குளம்சாத்தனூர், கருவாக்குறிச்சிகாலனி, முக்குளம்தர்காஸ் மற்றும் மேலதளிக்கோட்டை கிராமமக்களின் கோரிக்கையை ஏற்று, மன்னார்குடி முக்குளம்சாத்தனூர் வழித்தடத்தில் புதியபேருந்தை தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா கொடியசைத்து துவக்கிவைத்தார். அவைத் தலைவர் க.தன்ராஜ், மாவட்ட ஊராட்சித் முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றியக் கழகச் செயலாளர் நா.கவியரசு உள்ளிட்டோர் உடன் கலந்து கொண்டனர்.

கூட்டுறவு வங்கிகளின் மோசடிகள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

ஒன்றிய அரசுக்கு – கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, டிச.18- கூட்டுறவு வங்கிகளின் விதிமீறல்கள், பணமோசடிகள் மீது திடமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று நாடாளுமன்றத்தில் ஒன்றிய கூட்டுறவுத்துறை அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதில், கூட்டுறவுத்துறை அறிமுகப்படுத்திய 'டிஜிட்டல்' முன்னெடுப்புகள் எப்போது பயன்பாட்டுக்கு வரும் என்ற கேள்வியும் அடங்கும்.

அமைச்சகத்தின் பதில்கள், இந்தப் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு அளிக்கும் வகையில் இல்லை.

பெருகும் ஊழல்; ஆனால், நடவடிக்கை இல்லை:

கடந்த சில ஆண்டுகளாக, பல கூட்டுறவு வங்கிகள் பிரச்சனைகளில் சிக்கி, கோடிக்கணக்கில் மக்கள் டெபாசிட் செய்த பணம் ஏமாற்றப்பட்டிருப்பதாக ஊடகங்கள் பதிவு செய்துள்ளன. நியூ இந்தியா என்ற வங்கி மட்டும் 122 கோடி ரூபாய் மோசடி செய்துள்ளது.

இந்த சூழலில், கூட்டுறவு வங்கிகளின் தொடர் விதிமீறல்கள் மீதும், அவர்களின் பணமோசடி மீதும் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்ற கேள்விக்கு ஒன்றிய அரசு மௌனம் சாதித்துள்ளது.

டிஜிட்டல் திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாகவே இருக்கின்றன:

கூட்டுறவு வங்கித்துறைக்காக, Sahkar Digipay, Sahkar Digiloan ஆகிய இரண்டு திட்டங்களை ஒன்றிய அரசு கடந்த மாதம் அறிவித்தது. ஆனால், இதற்கான

செயற்பாட்டு வழிமுறைகள் வெளியிடப்படவில்லை. (Operational Guidelines) இன்னும் இதன் அர்த்தம், அந்த திட்டங்கள் வெறும் அறிவிப்புகளாகவே நீடிக்கின்றன என்பது. செயற்பாட்டு வழிமுறைகள் இல்லாமல் எந்த கூட்டுறவு வங்கியும், அவற்றை நடைமுறைப்படுத்த இயலாது.

இதற்கான தேதியைக் குறிப்பிட முடியுமா என்ற கேள்விக்கு முறையாக பதிலளிக்காமல், திட்டங்களின் நோக்கங்களை மட்டுமே ஒன்றிய அரசு பட்டியலிட்டுள்ளது.

மக்கள் நம்பிக்கையோடு பயன்படுத்த ஏதுவாகவும், அறிவிக்கப்பட்ட டிஜிட்டல் திட்டங்களை விரைவுப்படுத்தி மக்களுக்கு கூடுதல் பயனளிக்கும் வகையிலும், கூட்டுறவு வங்கிகள் பரிமாற்றம் அடைய வேண்டும். இதை விரைவில் செய்ய வேண்டியது, ஒன்றிய கூட்டுறவுத்துறையின் பொறுப்பு.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்தார்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் வரதராஜபுரத்தில்

பரம்பிக்குளம் - ஆழியார் திட்டக் கால்வாய்களை தூர்வாரும் 154 பணிகள்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர்!

திருப்பூர், டிச. 18–

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நீர்வளத் துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம் வரதராஜபுரத்தில் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்ட பரம்பிக்குளம் ஆழியார் பாசன திட்டக் கால்வாய்களை தூர்வாரும் 154 பணிகளை 13.12.2025 சனிக்கிழமை அன்று பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் க.ஈஸ்வரசாமி, திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாதன் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வக்கி வைத்தனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற திட்டப்பணிகள் அனைத்தையும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டகால் வாய்களை சிறப்பு தூர்வாரும் 154 பணிகளை துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.08.2025 அன்று திருப்பூர் மற்றும் கோவை மாவட்டம் வருகையின் போது பரம்பிக்குளம் ஆழியார் திட்டக்கால்வாய்களை தூர்வார விவசாயிகளால் கோரிக்கை வைக்கப்பட்டது. அதன்படி, நீர்வளத் துறையின் சார்பில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் மூலம் 154 பணிகளுக்கு ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இன்றைய தினம் பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டகால் வாய்களை சிறப்பு தூர்வாரும் 154 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே திருமூர்த்தி அணைக்கு வரக்கூடிய சுமார் 1,100 கன அடி தண்ணீர் 500 மற்றும் 600 கன அடி தண்ணீர் தான் கிடைத்துக் கொண்டிருந்தது. எனவே அப்படிப்பட்ட சூழலில் நம்முடைய கோரிக்கை ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கான்கிரீட் தளம் அமைப்பதற்கு ரூ,155.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி தந்தார்கள். அதன் அடிப்படையில் கான்கிரீட்டுகள் தளம் அமைக்கப்பட்டு இன்றைக்கு ஓரளவுக்கு 1,100 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டால் ஏறத்தாழ 900 கன அடிக்கும் குறையாமல் தண்ணீர் வந்து சேர்கிறது. அது மட்டுமல்ல மலைப்பகுதி எனவே பாறை உருண்டு விழுவதால் தண்ணீர் தேங்கி நிற்கும். அந்த இடத்தில் பாலம் போன்ற அமைப்பு ஏற்படுத்தி அங்கு ஏறத்தாழ ஒரு மீட்டர் கனஅடிக்கு எவ்வளவு பெரிய கனமான பாறை உருண்டு விழுந்தாலும் கூட உடையாத அளவில் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 2021 முதல் 2025 வரை திருப்பூர் மாவட்டத்திற்கு நீர்வளத்துறையின் சார்பில் ரூ,300.00 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது. மேலும். சிறப்பு தூர்வாரும் பணிக்காக ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், மாவட்ட பொதுமக்கள் சார்பிலும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், தலைமைப் பொறியாளர் (நீர்வளத்துறை) எஸ். முருகேசன், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், மாவட்ட அவைத் தலைவர், முன்னால் எம்.எல்.ஏ., இரா.ஜெயராமகிருஷ்ணன், துணை செயலாளர் தி.சக்திவேல், பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, ஒன்றிய கழக செயலாளர்கள் க.செந்தில்குமார், எஸ்.கே.மெய்ஞானமூர்த்தி, எம்.ஏ.சாகுல் அமீது, தி.செழியன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மகாலிங்கம், சி.சியாம் பிரசாத், கண்காணிப்புப் பொறியாளர் (பரம்பிக்குளம் ஆழியார் வடிநில வட்டம்) எம். கார்த்திகேயன். செயற்பொறியாளர் (ஆழியாறு வடிநிலக் கோட்டம்) ஆர். நரேந்திரன், (திருமூர்த்திக் கோட்டம், செயற்பொறியாளர்) டி.என்.பிரபாகரன், செயற்பொறியாளர் (பரம்பிக்குளம் கோட்டம்) சிவக்குமார், உதவி செயற்பொறியாளர்கள், உதவிப்பொறியாளர்கள், கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பரம்பிக்குளம் அழியாறு திட்ட விவசாயப் பிரதிநிதிகள், விவசாயப் பெருமக்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

நம் முகமும் முகவரியும்

தலைமைக்கழக அனுமதிபெற்றது

தலைமைக்கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக்கழக செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளி மாநில அமைப்பாளர்கள், அனைத்து அணிச்செயலாளர்கள், இளைஞர் அணிச்செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய / நகர / பகுதி / பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சொற்பொழிவாளர்களின் அலைபேசி எண்களுடன் கூடிய முகவரிநூல் வெளிவந்துள்ளது.

கழக நிர்வாகிகளிடம் இருக்க வேண்டிய கழக அலுவலகங்களில் இருந்திட வேண்டிய மிக மிக முக்கியமான முகவரி நூல்...

பக்கம் 536
விலை 500/-

நூலினை வங்கி மூலம் பெற :
அ. கூத்தரசன்
A/c. No. : 1262101017751
IFSC : CNRB0001262
கனரா வங்கி, கூடலூர் பிராஞ்ச்
கோவை - 20
செல் : 94863 24163

தொடர்பு கொள்ள
திருப்பூர் கூத்தரசன்
அன்னை அஞ்சுகம் பதிப்பகம்
153/1, சாமையன் நகர்,
எஸ்.ஆர்.கே.வி. அஞ்சல்
பெரியநாயக்கன்பாளையம்
கோவை - 641 020
செல் : 94863 24163

நாகை மாவட்ட கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் மற்றும் கிறிஸ்தவ ஊழியர்கள் ஐக்கியம் சார்பில் நாகை அவுரித் திடலில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் பெருவிழாவில்.. கழக சட்டமன்ற உறுப்பினரும், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் தலைவருமான எஸ்.இனிகோ இருதயராஜ் பேசினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என். கௌதமன், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ. தாமஸ்ஆல்வாஎடிசன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் அ.டயானா ஷர்மிளா மற்றும் கிறிஸ்துவ அமைப்பு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு குறிவைக்கும் போக்கு!

நேஷனல் ஹெரால்ட் வழக்கில் மீண்டும் அம்பலம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

புதுடெல்லி, டிச. 18- ஒன்றிய பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சித் தலைவர்களை குறி வைத்து தவறாகப் பயன்படுத்துவதை நேஷனல் ஹெரால்டு வழக்கில் நீதித்துறை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

நேஷனல் ஹெரால்டு வழக்கில், எதிர்க்கட்சித் தலைவர்களைக் குறி வைத்து ஒன்றிய பா.ஜ.க. அரசு மத்திய அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்துவதை நீதித்துறை மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்தியுள்ளது.

எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லாமல், அரசியல் போட்டியாளர்களை துன்புறுத்துவதற்கும், கேவலப்படுத்துவதற்கும் மட்டுமே இத்தகைய வழக்குகள் தள்ளப்படுகின்றன.

அவர்களின் பக்கம் உண்மை உள்ளதாலும் மற்றும் பயம் இல்லாமல் உள்ளதாலும், நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி மற்றும் எதிர்க் கட்சித் தலைவர், என் சகோதரர் ராகுல் காந்தி பக்கம் நியாயப்படுத்தப் பட்டுள்ளது.

மதச்சார்பின்மை மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களில் உறுதியாக நிற்கும் காந்தி குடும்பத்தை வேட்டையாடுவதில் பா.ஜ.க. தொடர்ந்து முனைந்தாலும், அதை பொறுத்துக்கொள்ள முடியாது.

மீண்டும் மீண்டும், இந்த பழிவாங்கும் அணுகுமுறையானது முதன்மையான புலனாய்வு நிறுவனங்களின் நம்பகத்தன்மையை களங்கப்படுத்துகிறது மற்றும் அவற்றை வெறும் அரசியல் மிரட்டல் கருவிகளாகச் சுருக்குகின்றது.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

கரூர் மாவட்டத்தில் தொடர் விளையாட்டுப் போட்டிகள்!

வெற்றி பெற்றவர்களுக்கு செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்!

கரூர், டிச.18- இளைஞர் எழுச்சி நாள் விழாவை கொண்டாடும் வகையில் கரூர் மாவட்ட கழகம் சார்பில் நடைபெற்று வரும் தொடர் விளையாட்டு திருவிழாவில், பெண்களுக்கான கபடி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு

மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பரிசுகளை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூரில் விளையாட்டு திருவிழா நடைபெற்று வருகிறது. அந்த வகையில், கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 2,15,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான பெண்களுக்கான கபடி போட்டி கரூர், திருவள்ளுவர் மைதானத்தில் நடைபெற்றது..

முதல் பரிசாக ரூ.75000 மற்றும் கோப்பையை கரூர் சேரன் உடற்கல்வியில் கல்லூரி அணியும், இரண்டாம் பரிசாக ரூ.50000 மற்றும் கோப்பையை புலியூர் என்ஏ. அகாடமி அணியும், மூன்றாவது பரிசாக ரூ.25000 மற்றும் கோப்பையை பாலசமுத்திரப் பட்டி பி. அணியும், நான்காவது பரிசாக ரூ.25000 மற்றும் கோப்பையை கரூர் சூர்யா நினைவு கபாடி குழுவும் வென்றனர். கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ பரிசு தொகை மற்றும் பரிசு கோப்பைகளை வழங்கினார்.

பாலசமுத்திரப்பட்டி ஏஅணி, கரூர் கொங்கு கலை அறிவியல் கல்லூரி அணி, குளித்தலை ப்ளாக் ஸ்குவாட் அணி மற்றும் கர்ணம்பட்டி பி.வி.ஒ.சி. அணிகள் காலிறுதி போட்டிகளில் வெற்றி பெறாவிட்டாலும் மிக சிறப்பாக விளையாடினர்.. சிறந்த ரைடராக தேர்வான என். கிருத்திகா, சிறந்த டிபென்டர் தேர்வான ராகவி ஆகியோருக்கு பரிசு வழங்கி செந்தில் பாலாஜி வாழ்த்து தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியர் ச.மிருணாளினி – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய பேருந்துகள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், டிச. 18- பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் BS6 ரக 7 புதிய பேருந்துகளை தொடங்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் - மாவட்ட ஆட்சியர் ச.மிருணாளினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந.மிருணாளினி தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில். BS6 ரக 7 புதிய பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் அனைத்து தரப்பு மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்குமான பேருந்து சேவையினை உறுதிப்படுத்திடும் வகையில் புதிய வழித்தடங்களையும், புதிய பேருந்துகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள்.

போக்குவரத்துத்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்திடும் வகையில் மின்சார பேருந்துகள், சி.என்.ஜி பேருந்துகள், தாழ்தள பேருந்துகள், மாற்றுத்திறனாளிகள் எளிதில் பேருந்தில் ஏறி இறங்க சாய்தள வசதிகளுடன்கூடிய பேருந்துகள், BS6 ரக பேருந்துகள் என பல்வேறு வகையான பேருந்துகள் தமிழ்நாட்டில் மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது,

அந்தவகையில், பெரம்பலூரில் இருந்து வாலிண்டபுரம் வழியாக திருவாளந்துரை, பெரம்பலூரில் இருந்து சிறுவாச்சூர்மருதடி நாட்டார்மங்கலம் வழியாக செட்டிகுளம், பெரம்பலூரில் இருந்து சத்திரமனை செட்டிகுளம் வழியாக பழையவிராலிப்பட்டி, பெரம்பலூரில் இருந்து வேப்பந்தட்டை - தொண்டமாந்துரை அரும்பாவூர் வழியாக கோரையாறு செல்ல இரண்டு பேருந்துகள், பெரம்பலூரில் இருந்து கிருஷ்ணாபுரம், அரும்பாவூர் வழியாக அ.மேட்டூர், பெரம்பலூரில் இருந்து வேப்பந்தட்டை, பிம்பலூர், பசும்பலூர் வழியாக வெள்ளுவாடி ஆகிய வழித்தடங்களில் 7 புதிய பேருந்துகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நகிழ்ச்சியில் போக்குவரத்துக்கழக திருச்சி மண்டல பொது மேலாளர் டி. சதீஸ்குமார், நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், கோட்ட மேலாளர் ராம்குமார், பெரம்பலூர் கோட்ட துணை மேலாளர் (தொழில் நுட்பம்) எம்.எஸ்.ஜி.புகழேந்தி ராஜ், பெரம்பலூர் கிளை மேலாளர் தண்டாயுதபாணி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டம்

மடத்துக்குளம் மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.ஈஸ்வரசாமி அவர்கள் மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக திரு. **பி.எஸ்.தங்கராஜ்** (10/99, பணத்தம்பட்டி மெட்ராத்தி அஞ்சல், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642 203. அவர்கள் மடத்துக்குளம் மேற்குஒன்றியக்கழகப்பொறுப்பாளராகநியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16.12.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் திருமானூர் மேற்கு ஒன்றியம், சன்னாவூரில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துதுறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதல்படி நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர்கள் லதாபாலு, மு.கணேசன், ஒன்றிய பொறுப்பாளர் ரெ.அசோகசக்ரவர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். ஆர்.முருகேசன் மற்றும் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.